**இலங்கை மருத்துவப் பேரவை**

# பதவி வெற்றிடம்

## உதவிப் பதிவாளர் பதவி

இலங்கை மருத்துவப் பேரவையின் உதவிப் பதிவாளர் பதவிக்காக பொருத்தமான தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து 2025-04-01ஆம் திகதி வரை இலங்கை மருத்துவ பேரவையினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் இலங்கை மருத்துவ பேரவையின் முழு நேர அதிகாரியாகவிருப்பார்.

**தகைமைகள்:**

பல்கலைக்கழகம்/ உயர்கல்வி நிறுவனத்திலிருந்து நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ முதுமாணி நிலையில் பட்டப்பின்படிப்பு பட்டம் மற்றும் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் முதலாவது பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதினைந்து (15) வருடத்திற்குக் குறையாத நிர்வாக அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும். பல்கலைக்கழக முறைமையில் பதிவாளராக அனுபவத்தைக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மருத்துவப் பேரவையில் ஓய்வினை விடுமுறையில் **(Sabbatical Leave)** இருக்கும் அபேட்சகர்களும் கவனத்திற் கொள்ளப்படுவர்.

''நிர்வாக அனுபவம்" என்பது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவனத்திலில் ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் ஒட்டுமொத்த முகாமைத்துவம் அல்லது பொது நிர்வாகம் அல்லது மனிதவள முகாமைத்துவத்தில் அரச அல்லது தனியார் துறை நிறுவனத்தில் முகாமைத்துவ மட்டத்தில் முழு நேர பதவியில் பெற்றுக்கொண்ட அனுபவத்தைக் குறிக்கின்றது. நிதி/ பொறியியல் அல்லது ஏனைய தொழில்நுட்பம் போன்ற விசேடத்துவ துறைகளில் பெற்றுக்கொண்ட அனுபவம் இந்த தேவைக்காக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

**வயது :** ஏற்புடையதான அரசாங்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்.

**சம்பளம் :** கல்வி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். குறைந்தபட்ச சம்பளம் பேச்சுவார்த்தைக்கு உட்பட்டதாகவும் பல்கலைக்கழக முறைமையின் உதவி பதிவாளரின் குறைந்தபட்ச ஆரம்ப சம்பளமாகவும் இருக்கும்.

**ஏனைய நன்மைகள்:**

- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியரினால் 10% பங்களிப்புச் செய்யப்படும் என்பதுடன் தொழில் வழங்குநரினால் 15% பங்களிப்புச் செய்யப்படும்.
- தொழில் வழங்குநரினால் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3%

**வேலைவாய்ப்பின் விதிகள்:** நியமனம் இரண்டு வருட காலத்திற்கு முழு நேர ஒப்பந்த அடிப்படையில் இருக்கும் என்பதுடன் இறுதி இரண்டாம் தவணைக்கான நியமனம் சாத்தியதன்மை சகிதமாகும்.

**கடமைகள் மற்றும் பொறுப்புகள்:**

- இலங்கை மருத்துவப் பேரவையின் பதிவாளருக்கு உதவுதல்
- மருத்துவப் பேரவையின் முகாமைத்துவ விவகாரங்களுக்கு உதவுதல் மற்றும் அறிவித்தல்களை வழங்குதல் மற்றும் மருத்துவ பேரவையின் சார்பாக சகல கடித வேலைகளையும் மேற்கொள்ளல்.
- மருத்துவப் பேரவையின் பதிவேடுகளை வைத்திருக்க உதவுதல்.
- அதன் நடவடிக்கைகளை பதிவு செய்து பராமரித்தல்
- மருத்துவப் பேரவையின் சகல நிர்வாக தீர்மானங்களையும் நிறைவேற்ற உதவுதல்
- மருத்துவப் பேரவை / பதிவாளரினால் ஒப்படைக்கப்படும் இதுபோன்ற ஏனைய கடமைகளை செய்தல்.

**விண்ணப்ப நடைமுறை:**

தயவு செய்து உங்கள் முழுமையான சுய விபரங்கள் அடங்கிய படிவத்துடன் முகப்புக் கடிதம் ஒன்றுடன் உங்கள் விரிவான விண்ணப்பத்தை, 2025 ஏப்ரல் 01ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடிய வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் அல்லது registrar@slmc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சலிடுதல் வேண்டும்.

**டாக்டர் H.D.B. ஹேரத்,**
**பதிவாளர்,**
**இலங்கை மருத்துவப் பேரவை,**
**இல. 31, நொரிஸ் கெனல் வீதி, கொழும்பு-10.**
**registrar@slmc.gov.lk**
**16.03.2025**